**கவனிக்க.**- *2010.11.12 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1681 - 2010 නොවැම්බර් මස 19 වැනි සිකුරාදා - 2010.11.19

*1681 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி II – சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமுலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 122 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, நவெம்பர் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# நானாவித அறிவித்தல்கள்

### கொழும்பில் அமர்வு செய்யும் மேல் மாகாண உயர்நீதிமன்றில் (சிவில் நியாயதிக்கத்தின்கீழ் செயற்பாடுடையது).

கொழும்பு 14, கிறேண்பாஸ் வீதி, முக்தார் பிளாசா, 1 ஆம், 2ம் மாடி, இல. 78, ஜி. அன்ட் எஸ். மனுபக்சறிங் (பிறைவேற்) லிமிடெட்டின் விடயம் தொடர்பாகவும் ;

முடிவுறுத்தல் விண்ணப்பம் இல. : 47/2010/CO

2007 ஆம் ஆண்டின் கம்பனி சட்டத்தின் 7 ஆம் பகுதி XII இன் கீழ் நீதிமன்றத்தினால் முடிவுறுத்தல் சம்பந்தமான விண்ணப்பம் தொடர்பாகவும் ;

கோற்ஸ் திரெட் எக்ஸ் போட்ஸ் (பிறைவேற்) லிமிடெட் தளம் 2, இல. 123, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 04.

.................... மனுதாரர்

2010, ஆண்டு ஆடி மாதம் 30 ஆந் திகதி கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றில் மேற்சொல்லப்பட்ட கம்பனியை முடிவுறுத்தல் செய்வது தொடர்பாக கொழும்பு - 04, பௌத்தாலோக மாவத்தை, 23ஆம் இலக்கத்தைச் சேர்ந்த மேற்கூறிய கோற்ஸ் திரெட் எக்ஸ் போட்ஸ் (பிறைவேட்) லிமிடெட்டினால் மனுச் செய்யப்பட்டுள்ளதென அறிவித்தல் கொடுப்பதோடு, குறித்த மனுவை இந்நீதிமன்ற 2010 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 06 ஆந் திகதி பரிசீலனைக்கெடுத்துக்கொள்ளுவதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளதென்றும் குறித்த கம்பனியினது கடன் கொடுநர்கள், பங்குதாரர்கள் யாராவது குறித்த மனு சம்பந்தமாக ஆணை வழங்குவதை ஆதரிப்பவர்களோ, எதிர்ப்பவர்களோ இருப்பின், குறித்த விளக்கத்திற்குரிய நேரத்தில் சமூகமாகவோ சட்டத்தரணி மூலமோ வழங்கறிஞர் மூலமோ ஏற்பட்டுத் தோற்ற முடியும். உரிய கட்டணம் செலுத்தி குறித்த கம்பனியினது கடன்கொடுநர்களும் பங்குதாரர்களும் குறித்த மனுவின் பிரதியை பின்வருபவரிடம் பெற்றுக்கொள்ளவும் :-

சுதத் பெரேரா அசோசியேட்ஸ்,
மனுதாரரின் பதிவு செய்த சட்டத்தரணிகள்,
இல. 51, கசபா வீதி,
கொழும்பு 05.

**குறிப்பு**.- குறித்த மனுவின் விளக்கத்தில் தோற்ற விரும்புவர் எவராயினும் சுதத் பெரேரா அசோசியேட்ஸ் என்னும் பெயருடையவர்களுக்கு எழுத்துமூல அறிவித்தலை நேரிலோ தபால் மூலமோ வழங்கவேண்டும். குறித்த அறிவித்தலில் குறித்த நபரின் பெயரும், விலாசமும், ஸ்தாபனமாயின் குறித்த ஸ்தாபனத்தின் பெயரும், விலாசமும் இருப்பதோடு அவற்றில் குறித்த நபரோ, ஸ்தாபனமோ ஒப்பமிட்டுருப்பதோடு அவரினதோ, அவர்களினதோ சட்டத்தரணி (இருப்பின்) அவர்கள் நேரிலோ, தபால் மூலமோ போதுமான அவகாசம் வழங்கி 2010 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 04 ஆந் திகதி 1 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக வழங்கவோ அல்லது தபால் மூலம் கிடைக்கவோ செய்தல் வேண்டும்.

சுதத் பெரேரா அசோசியேட்ஸ்,
மனுதாரரின் பதிவு செய்த
சட்டத்தரணிகள்,

11-389

---

### ஹேதன் கல்வி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

கமலா ரணதுங்க, பா. உ., ஆகிய நான், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்கீழ் ''ஹேதன் கல்வி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த ஹேதன் கல்வி மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(1) முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களை ஆரம்பித்தல், சிறுவர் பூங்காக்களை நிறுவுதல் மற்றும் நூல் நிலையங்களைத் தாபித்தலும் பேணிவருதலும் ;

(2) பெற்றோர்களை இழந்த, குறைந்த வருமானம் பெறுகின்ற மற்றும் வெளிநாடுகளில் தொழில்புரிகின்ற தாய்மார்களின் பிள்ளைகளுக்கு வதிவிடக் கல்வி வசதிகளை வழங்குதல்.

(3) ஆங்கிலமொழி மூலமான கல்வியை வழங்குவதற்கான வசதிகளை அளித்தல், கல்வி நிலையங்களை நிறுவுதல் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிலையங்களை ஆரம்பித்தல்.

பிறவும்.

கமலா ரணதுங்க,
பாராளுமன்ற உறுப்பினர்.

11-447

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.